அதிலுள்ள குறைகளைப் போக்கி அதனை நிறைவான சட்டம் ஆக்குவதற்காக விரைவில் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருகிற காலத்தில் நிச்சயமாக வழக்கறிஞர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு உண்டாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 134, டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

134— **பெண்ணாகரத்தில் நீதிமன்றம்.**

*1057. **டாக்டர் வெ. புருஷோத்தமன்** :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பென்னாகரத்தில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஒவ்வொரு வருவாய் வட்டந்தோறும் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு உயர் நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ளது. பென்னாகரத்தில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் திட்டமும் அச்செயற் குறிப்பில் அடங்கும்.

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. எப்போது உயர்நீதி மன்றத்தினுடைய ஒப்புதல் கிடைக்கும் ? எந்த நிதி ஆண்டிலே இது வருவதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளன என்ற நிலையை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி இருக்கிறோம். அவ்வப்போது அவர்களுக்கு நினைவுபடுத்தி இருக்கிறோம். துரிதப்படுத்தி விரைவிலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவோம்,

TRUTH ALONE TRIUMPHS

1991 அக்டோபர் 3]

டாக்டர் வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு 5 காவல் நிலையங்கள் உள்ளன. 2,000 வழக்குகள் அதிகமாக வருடத்திற்கு வருகின்ற நிலையில் உள்ளது. 36 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பாலக்கோடு செல்ல வேண்டி இருக்கிறது ; 60 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கிருஷ்ண கிரிக்கு செல்ல வேண்டி இருக்கிறது ; 30 கிலோ மீட்டர் தூரத்தி லுள்ள தர்மபுரிக்கு செல்ல வேண்டி இருக்கிறது. இதனால் அர சுக்கு பண விரயமும், காவலர்களின் நேர விரையமும், அப்பாவிப் பொதுமக்களுக்கு பல்வேறு இடையூறுகளும் ஏற்படுகின்றன. இது மிகவும் பின்தங்கிய தொகுதி. இந்தத் தொகுதியிலே காட்டு வீரப்பன் மாயாவி அவர்களுடைய சந்தனக் கட்டை வழக்குகள் மற்றும் சிவில், கிரிமினல் வழக்குகள் மற்றும் கொள்ளை வழிப்பறி, கொலை வழக்குகள் மற்றும் கள்ளச்சாராய வழக்குகள் அதிகமாக நடைபெறுகின்ற இந்தத் தொகுதியிலே அவசியம் ஒரு கோர்ட் தேவைப்படுகின்ற காரணத்தினால் அரசு துரிதப்படுத்தி நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அரசு தாலுகா தோறும் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பது குறித்து ஒரு பாலிஸ் டெசிஷன் எடுத்து இருக்கிறது. அதன்படி ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம்—அதாவது இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் இருக்க வேண்டுமென்று கொள்கை அடிப்படையில் அங்கே அதைக் கொணர அரசு பரிசிலிக்கும் என்ற உறுதியை அளிக்கிறேன். அதன் அடிப்படையில் ஒவ்வொரு வட்டந்தோறும் ஒரு குற்றவியல் நீதிமன்றம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து தக்க கருத்துருவை அரசுக்கு அனுப்பிவைக்குமாறு சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட் டிருக்கிறார். இது குறித்து கருத்துரு சென்னை உயர்நீதிமன்றத் திடமிருந்து வந்த பிறகு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பரிசீலனை செய்து தக்கன செய்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரத்திற்கு ஒருமுறை என்ற வீதத்தில் பென்னாகரத் தில் குற்றவியல் அமரும் நீதிமன்றம் ஒன்று கூடுகிறது. அதனை வாரத்திற்கு இரண்டு நாட்கள் என்ற முறையில் கொண்டுவர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்க ளுடைய மேலான யோசனை பரிசிலிக்கப்படும்.